பட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவுசெய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 12 வியாழக்கிழமை (28 07 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 242

# பல எதிரணிப் பிரமுகர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாம்!

## பாதுகாப்பு வழங்கும்படி அரசிடம் கோருகின்றனர்

கொழும்பு, ஜூலை 28

பொதுத்தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே இருக்கும் வேளையில் தேர்தல் வன்செயல்கள் நாட்டில் பரவலாக இடம்பெற்று வருகின்றன. எதிரணிப் பிரமுகர்கள் பலரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதை அடுத்து, அவர்களில் பலர் தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்படி அரசாங்கத்திடம் கோரியிருக்கின்றனர்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் சந்திரிகா குமாரணதுங்க, செயலாளர் டி.எம். ஜயரத்ன உட்பட பல பிரமுகர்களின் உயிருக்கே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பொதுத் தேர்தலின் இறுதி நேரத்தில் திருப்பங்களை ஏற்படுத்துவதற்காக முக்கிய பிரமுகர்களின் உயிருக்கு உலை வைக்கப்படக் கூடும் என பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

ஜே. வி. பி. வேட்பாளர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கும்படி ரோஹண விஜேவீராவின் சகோதரி ஜனாதிபதி விஜேதுங்காவை கோரி

(6ஆம் பக்கம் பார்க்க)

### எதிரணி வெற்றியீட்டினால்

## பிரதமராக சிறிமாவையே டி.பி. விஜேதுங்கா நியமிப்பார்!

### பிரதமர் ரணில் தகவல்

கொழும்பு, ஜூலை 28

பொதுத் தேர்தலில் எதிரணிக் கூட்டணி வென்றால் பிரதமர் பதவியை ஏற்க வரும்படி சிறிமாவோ பண்டாரநாயக்காவையே ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அழைப்பார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இத்தகவலை பூடகமாக வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் கட்சி ஒன்றின் தலைவரையே பிரதமராக நியமிக்க அரசமைப்பு இடமளிக்கிறது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று 'வெகம்பயா'வில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பொ.ஐ.மு. வெற்றிபெற்றால் பிரதமராக சந்திரிகாவே நியமிக்கப்பட வேண்டும் என்று கோரி ஜனாதிபதிக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் எல்லாம் கூட்டாக விடுத்த வேண்டுகோள் பற்றி பிரஸ்தாபிக்கையில் பிரதமர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டினால் அதன் தலைவராக தற்போது இருக்கும் சிறிமாவோ பண்டாரநாயக்காவையே பிரதமராக ஜனாதிபதி நியமிப்பார்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வல்வெட்டித்துறையில் நேற்று புக்காரா கடும் தாக்குதல்

வல்வெட்டித்துறை ஜூலை 28

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றுக் காலை விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. புக்காரா விமானம் ஒன்றும் ஹெலிக்கொப்டர் ஒன்றும் தாக்குதல்களை நடத்தின.

நேற்று அதிகாலை சுமார் 4.30 மணியிலிருந்தே ஹெலிக்கொப்டர் ஒன்று ரேவடிப் பகுதிக்கு மேலாக அடிக்கடி பறந்து கடற்பிராந்தியத்திலும், கடற்கரைப் பிரதேசம் மீதும் கலிபர் தாக்குதல்களை நடத்தியது.

ஹெலிக்கொப்டர் அடிக்கடி பறந்து தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தபோது, காலை சுமார் ஆறு மணிக்குப் பின்னர் பலாலிப்பக்கமாக இருந்து வந்த "புக்காரா" விமானமும் தாக்குதலை ஆரம்பித்தது. காலை 8 மணிவரை இவ் விமானத்தாக்குதல் தொடர்ந்தது.

இத்தாக்குதல்களால் கடலில் தொழில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தமது படகுகள், கட்டுமரங்கள், வலைகள் போன்ற உபகரணங்களைக் கடலில் விட்டு விட்டு நீந்திக் கரைசேர்ந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### "தடா" சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட

## ஈழத்தமிழர் ஒருவரை விடுவிக்க சென்னை நீதிபதி உத்தரவு

சென்னை, ஜூலை 28

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்பட்ட — நேரன் என்ற 16 வயதுடைய ஈழத் தமிழ் இளைஞரை சென்னை விசேட நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

1993 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி கடலில் பழுதுபட்ட விடுதலைப் புலிகளின் படகிலிருந்து இவர் மீட்கப்பட்டு நாகபட்டினத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவரால் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இவருடன் வந்த தோழர்கள் ஐவர் தப்பிவிட்டதாகவும் கூறப்பட்டது.

துப்பாக்கி கடத்தியதாகவும் —

பெயர் தெரியாத மற்ற ஐவருடன் சேர்ந்து தமிழ்நாட்டில் பயங்கரவாதச் செயல்களைச் செய்ததாகவும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால் அரசுத் தரப்பினர் குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை என்று தெரிவித்து ... வீரசேகரன் வாதிட்டார். திராவிட கழகத்தைச் சேர்ந்த இவர், ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர் பத்மநாபா கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ அதிகாரி பலி!

கொழும்பு, ஜூலை 28

வடக்கில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இராணுவம் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தியது என்றும் —

இராணுவம் எதிர்பாராத வகையில் புலிகள் திருப்பித் தாக்கினர் என்றும் ... யில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### அராலியில் ஹெலித் தாக்குதல்

அராலி கடற்பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை நோக்கி நேற்று அதிகாலையும், காலையும் இரு தடவைகள் ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஹெலிக்கொப்டர் பல தடவைகள் வட்டமிட்டபடி வேட்டுக்களைத் தீர்த்ததை அடுத்து மீனவர் தொழிலை ... நிறுத்தி வள்ளங்களையும் — மீன்பிடி உபகரணங்களையும் கடற்பகுதியில் விட்டுக் கரையை அடைந்தனர்.

## சர்வதேச செஞ்சிலுவை அதிகாரி இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 28

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஜெனிவா தலைமையகத்தில் இலங்கை விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரியான திரு. மக்ஸ் கண்டோரன் (Max Handoran) இன்று காலை யாழ்பாணம் வருகின்றார்.

பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்ட யாழ். ஆஸ்பத்திரி மீது இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல் குறித்து இவர் முழு விசாரணைகளை மேற்கொள்வார்.

சம்பவ இடத்தைப் பார்வையிடுவதுடன் ஆஸ்பத்திரி அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

ஒரு வாரம் இங்கு தங்கியிருக்கும் அவர் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள் இறக்குதலில் உள்ள பிரச்சினைகள் மற்றும் அகதிகள் பிரச்சினை

(6ஆம் பக்கம் பார்க்க)

## உ. த. பரீட்சை வினாத்தாள் முதல் தொகுதி இன்று வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 28

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சைக்குரிய முதல் தொகுதி வினாத்தாள்கள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து பலத்த பாதுகாப்புடன் வினாத்தாள்கள் கொண்ட பொதிகள் நேற்று திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் —

அங்கிருந்து இவை 'பினான் பயானீ' கப்பல் மூலம் இன்று காலை பருத்தித்துறைக்கு எடுத்து வரப்படும் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு செல்கின்ற யாழ். கல்வி அலுவலக அதிகாரி இந்த வினாத்தாள்களை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பருத்தித்துறை வரையும் நரோமா கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 28

திருகோணமலையில் இருந்து இவ்வார இறுதியில் நடத்தப்படவிருக்கும் 'நரோமா' கப்பல் பயணிகள் சேவை பருத்தித்துறை வரையும் நடத்த கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி செல்வி மேரி மேர்கின்ஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை வரை இவ்வார இறுதியில் பயணிகள் சேவையை "நரோமா" கப்பல் மூலம் இரு தடவைகள் மேற்கொள்ளவும் —

காங்கேசன் துறையில் இருந்து பருத்தித்துறைக்கு இணைப்பு கப்பல் சேவை மூலம் பயணிகளை ஏற்றி இறக்கவும் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

தேர்தல் முடியும் வரை 'நரோமா' கப்பல் சேவையை பருத்தித்துறை வரை நடத்துவதில்லை என முடிவு எடுக்கப்பட்டிருந்த போதும் —

தற்சமயம் இணைப்பு கப்பல் சேவைக்கு கப்பல் வசதியில்லாத காரணத்தால் நரோமா கப்பலை பருத்தித்துறை வரை நடத்த கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

## 2 அதிகாரி, 3 சிப்பாய்கள் பண்டத்தரிப்பில் காயம்

கொழும்பு, ஜூலை 28

கடந்த வியாழக்கிழமை பண்டத்தரிப்பில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர் தாக்குதலில் இரண்டு அதிகாரிகளும், மூன்று சிப்பாய்களும் காயமடைந்தனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் சிறுரக ஆயுதங்கள், மோட்டார் குண்டுகள் ஆகியவை மூலம் இத் தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பேச்சு ஆரம்பித்ததும் இலங்கை திரும்புவேன்

### வரதராஜப்பெருமாள் பேட்டி

கொழும்பு, ஜூலை 28

இனப்பிரச்சினைக்கு அதிகாரபூர்வ பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் முயற்சி முன்னெடுத்துச் செல்லப்படும் போது நான் இலங்கை திரும்பி தீவிர அரசியலில் ஈடுபடுவேன்.

வடக்கு-கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

தாயகம் திரும்பும் காலம் பற்றி தமது ஈ பி ஆர் எல் எவ். கட்சியுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

எதிர்காலத்தில் தமது அரசியல் பங்கு பற்றி ஈ. பி. ஆர். எல். எவ் கட்சியே தீர்மானிக்கும் என்றும் அவர் சொன்னார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியிட்டும் பட்சத்தில் அந்த அரசுடன் தமது கட்சி பேச்சு நடத்தும் என்றும் அவர் கூறினார். (உ-எ)

### தேர்தல்களைக் குழப்ப

## மட்டுநகரில் புலிகள் ஊடுருவித் தாக்கலாம்

### படையினர் மத்தியில் அச்சம்

கொழும்பு, ஜூலை 28

மட்டக்களப்பு மாவட்டத்தின் நகரப்பகுதியில் விடுதலைப்புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தலாம் என்று இராணுவத்தினர் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களைக் குழப்ப விடுதலைபுலிகள் காட்டுப் பகுதிகளில் இருந்து வாவியைக் கடந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஊடுருவலாம் என்று படையினர் கருதுவதாகவும் —

இதனால் படையினர் வாவிப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாவிப்பிரதேசம் மீது படையினர் கூடுதல் கண்காணிப்பை மேற்கொள்வதாகவும் —

வாவிக்கு அப்பால் உள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலில் பொன்னாலை கோயில் சேதம்

சுழிபுரம், ஜூலை 28

காரைநகர் வலந்தலைச் சந்தியிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டால் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகா இலட்சுமி கோவிலின் பின்பக்க வெளிப்பிரகார சுவர் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. (உ-28)

## சந்திரிகா பற்றிய வீடியோ படம் பார்த்தோர் கைது

கொழும்பு, ஜூலை 28

சந்திரிகா குமாரணதுங்காவின் வாழ்க்கை பற்றிய வீடியோ படத்தை கம்பஹாப் பொலீஸார் நேற்று முன்தினம் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹாவில் இப்படம் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்த கட்டடம் ஒன்றினுள் திடீரென்று புகுந்த பொலீஸார் வீடியோ நாடாவைக் கைப்பற்றியதுடன், படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களையும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அம்மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரின் உத்தரவின் மீது பொலீஸார் இந்த நடவடிக்கையை எடுத்ததாக சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட முன்னாள் எம்.பியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வீடியோ படம் காண்பிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய முடியுமா என்பது பற்றி அறிந்து கொள்ள அந்த வீடியோ நாடா பொலீஸாரினால் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

## கைதிகளின் பற்களை பிடுங்கி எறிந்த பொலீஸார்!

### நஷ்டஈடு வழங்கத் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 28

அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றில், ஆறு பொலீஸாரினால் சித்திரவதை செய்யப்பட்ட மூன்று நபர்களுக்கு 95 ஆயிரம் ரூபா நட்டஈடாகவும் 22 ஆயிரத்து 500 ரூபா வழக்குச் செலவாகவும் வழங்கும்படி அரசாங்கத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முறைப்பாட்டுக்காரர்களுக்கு 30 ஆயிரம் ரூபா நட்டஈடாக வழங்கும்படி முன்னாள் எதிர்மனுதாரரான பொலீஸ் இன்ஸ்பெக்டர் ரொஹான் பெர்னாண்டோவுக்கும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஹோமாகம பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட காமினி பிரியகுமார, பி.ஏ. மஹிபால, எம். ஏ அனுரா ஆகியோரே பொலீஸாரின் சித்திரவதைக்கு ஆளானார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸார் குறட்டினால் காமினி பிரியகுமார, மஹிபால ஆகியோரின் தலா நான்கு பற்களை பிடுங்கிச் சித்திரவதை செய்தனர் என்று அடிப்படை உரிமை மீறல் மனுவில் கூறப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட ஆறு பொலீஸார் மீது பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்படி உயர் நீதிமன்றம் பொலீஸ்மா அதிபரைப் பணித்தது. (உ-எ)

## ஓய்வு பெற்ற படையினர் மீண்டும் சேர பின்னடிப்பு

### அரசின் முயற்சி படுதோல்வி

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஓய்வு பெற்ற இராணுவத்தினரை மீண்டும் இராணுவத்தில் சேர்ந்து கொள்ளுமாறு கோரி ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிவிப்புக்கு பலன் கிடைக்கவில்லை என்று கொழும்பு நாளேடு ஒன்று தெரிவித்துள்ளது.

பத்திரிகைகள் வாயிலாகவும் வேறு தொடர்பு சாதனங்கள் மூலமும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு பகிரங்கமாக இவ்வறிவிப்பை விடுத்திருந்தது.

மீண்டும் சேர்பவர்களுக்கு பல்வேறு சலுகைகளுடன், வழமையான சம்பளம், ஓய்வூதியம் என்பன வழங்கப்படும் என விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனாலும் பாதுகாப்பு அமைச்சின் அந்நடவடிக்கை தோல்வி அடைந்துள்ளது என்று அந்நாளேடு சுட்டிக்காட்டியுள்ளது.

## ராஜீவை அவதூறு செய்யும் வெங்கடராமனின் நூல்

புதுடில்லி, ஜூலை 28

முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கடராமன் எழுதிய நூல் ஒன்றில் முன்னாள் பிரதமர் ராஜீவ் குறித்து அவதூறாக எழுதப்பட்டிருப்பதாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் குறித்து வெங்கடராமன் வெளியிட்டுள்ள கருத்துகள் ராஜீவ் அனுதாபிகளின் உணர்வுகளை அவமானப்படுத்துவதாக அமைந்துள்ளது என 70க்கு அதிகமான காங்கிரஸ் எம். பிக்கள் புதுடில்லியில் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கண்டித்துள்ளனர்.

வெங்கடராமனின் கருத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய தேர்தல்

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற வேண்டிய இந்திய பொதுத் தேர்தல் அதற்கு முன்னர் நடத்தும் சாத்தியம் உள்ளதாக பிரதமர் பி வி நரசிம்மராவ் தெரிவித்திருக்கிறார்.

தேர்தலைச் சந்திக்க தயாராகும்படியும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களை பிரதமர் உஷார்ப்படுத்தியுள்ளார்.

## இ. தொ. கா. உறுப்பினர்கள் 17 பேர் எம். பிக்களாவர்

### தொண்டமான் நம்பிக்கை

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் 14 பேர் எம். பிக்களாகத் தெரிவு செய்யப்படுவர். தேசியப் பட்டியல் மூலம் இ. தொ. காவின் சார்பில் நியமனம் பெறும் மூவரையும் சேர்த்து இ. தொ. காவின் 17 எம். பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சி அமைக்க உதவுவர்.

— அமைச்சர் தொண்டமான் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க

# தேசிய அரசு அமைக்கும் சாத்தியம் குறித்துப் பேச்சு

கொழும்பு, ஜூலை 28 எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுசனஐக்கிய முன்னணி மிகக் குறைவான பெரும்பான்மையுடனே வெற்றியீட்டும் என்றும் — அந்த நிலை ஏற்படின் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் சாத்தியம் பற்றிய பேச்சுக்கள் இப்போதே ஆரம்பமாகியுள்ளன என்றும் சண்டே டைம்ஸ் தகவல்வெளியிட்டுள்ளது.

அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி 'சண்டே டைம்ஸ்' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

தேசிய அரசு ஒன்றை அமைப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் சில முன்னணித்தலைவர்களும் தங்கள் விருப்பத்தை வெளியிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அரசு ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றி, அதனை சம்பிரதாய பதவியாக்கக் கூடிய அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவர முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## சுகாதார கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 28 வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் இரண்டாம் காலாண்டில் நடைபெற்ற சுகாதார செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிமுதல் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும். (இ-4)

## தொல்பொருள் கண்காட்சி

தென்மராட்சி, ஜூலை 28 மாமனிதர் கலைஞானியின் தொல்பொருள்களின் கண்காட்சி இன்றும் நாளையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். தினமும் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 5-30 மணி வரை கண்காட்சியை பார்வையிடலாம். (ஜ-117)

# ஐ. தே. க. பிரசாரமேடைகளில் பிரேமா எதிர்ப்புக் கணைகள்

## கட்சிக்குள் பெரும் அதிருப்தி

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார மேடைகளில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான கண்டனங்கள் பகிரங்கமாகத் தெரிவிக்கப்படுவது அக்கட்சியில் உள்ள பிரேமதாஸா ஆதரவாளர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்தலைமைப் பீடத்தில் உள்ளவர்களுக்கு இடையே இது தொடர்பான முரண்பாடு கடந்த சனிக்கிழமை கண்டியில் நடைபெற்ற ஐ. தே. க. பிரசாரக் கூட்டத்தில் பகிரங்கமாக வெளியானதாக சண்டே டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய காமினி திஸநாயக்கா, 1947 இல் இருந்து கட்சிக்கு தலைமை வகித்து சிறந்த பணியாற்றியவர்களென டி. எஸ் சேனநாயக்கா, டட்லிசேனநாயக்கா, ஜே ஆர் ஜெயவர்த்தனா ஆகியோரை பாராட்டினார். ஆனால் பிரேமதாஸா குறித்து ஒரு வார்த்தையும் கூறவில்லை; இது மேடையில் அமர்ந்திருந்த ஒஸி அபயகுணசேகராவுக்கு சினத்தை ஏற்படுத்தியது.

அடுத்து பேசிய வட மேல் மாகாண முதலமைச்சர் ஜி.எம். பிரேமச்சந்திரா, 'பெரிய சண்டியர்களை எல்லாம் கடந்த காலத்தில் நாம் சந்தித்துள்ளோம்; சந்திரிகா அவர்களிலும் பார்க்க பெரியவரா'' — என்று கேட்டார்.

பிரேமச்சந்திரா பெரிய சண்டியர் எனக் குறிப்பிட்டது பிரேமதாஸாவையே என்பது மேடையில் இருந்தவர்களின் முகங்களில் தெரிந்தது.

ஒஸி அபயகுணசகரா பின்னர் உரை நிகழ்த்துகையில் பிரேமதாஸாவைப் புகழ்ந்து பேசினார்.

பிரேமதாஸாவுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிக்கும் ஐ தே. க தலைவர்கள் சிலரை அவர் கண்டித்துப் பேசியது, இறுக்கமான முகங்களை வைத்து இருந்த ஜனாதிபதி விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரை நிம்மதி பெற வைத்தது என்று சண்டே டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-எ)


## நற்கருணை நாதா உமக்கு எமது இதயம் நிறைந்த நன்றிகள்

சுண்டிக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில். தோலகட்டி செபமாலைத் தாசர் ஆச்சிரமத்தின் கிளையாக அருள் ஆச்சிரமம். 29 - 07 - 1969 இல் ஆரம்பிக்கப்பட்ட 25 புனித ஆண்டுகளை நாளைய தினம் நிறைவு செய்கிறது. மக்களோடு இணைந்து நற்கருணை ஆராதனை வழிபாடுகளையும், தியான வாழ்வையும் பகிர்ந்துகொள்ள எமது ஆலயமும், மக்களும் தேர்ந்துகொள்ளப்பட்ட நற் பேற்றுக்காக இறைவா உமக்கு நன்றி! அருள் ஆச்சிரமத்தின் முதல் 5 வருடங்களுக்கு மேலாக மக்களை நற்கருணை வாழ்வில் ஊன்றி வளம்பெற வைத்து அதன்பின் அருகாமையில் அமைக்கப்பட்ட தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்ட பின்னும், தொடர்ந்து எமது மக்கள் பெற்று வரும் அருங்கொடைகள், ஆசிகள் அருள்நிறை வளங்கள் அனைத்திற்கும் எமது இதயம் நிறை நன்றி. ஆராதனை வணக்கங்களையும் கருணை கூர்ந்து, மனமுவந்து ஏற்றருள்வாய் இறைவா!

நன்றித்திருப்பலி வழிபாடுகள்,

1. 29 வெள்ளி காலை 6-00 மணி திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்
2. மாலை 4 30 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் அருள் ஆச்சிரமம்.

சுண்டிக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்
பங்கு மக்களும், பங்குத்தந்தையும்.
(32113)



மானிப்பாய் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டமும் பழைய மாணவர் ஒன்றிய தினமும்

காலம்: 28 - 08 - 94 ஞாயிற்றுக்கிழமை
இடம்: நூல்நிலையம்
நேரம்: பிற்பகல் 4-00மணி பொதுக்கூட்டம்

பிரேரணைகளும், மனுக்களும் 15 - 08 - 94 பிற்பகல் 2 00மணிக்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ந: விவேகானந்தராஜா
செயலாளர்
சோதி வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.
(7553)



## ஆற்றல் தந்து உதவினீர் அகம் நெகிழ்ந்த நன்றிகள்

எமது இவ்வாண்டுக் கம்பன் விழா பெரும் சிறப்புடன் நடைபெறப் பெரிதும் துணை செய்த விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினருக்கும், தமிழீழக் காவல் துறையினருக்கும், நல்லூர் கந்தசுவாமி கோயில் தேவஸ்தானத்தினருக்கும், யாழ். மாநகர சபையினருக்கும், வட பிராந்திய சர்வோதய அமைப்பினருக்கும், செய்தி ஸ்தாபனங்களுக்கும், யாழ். இந்து, யாழ் மத்திய கல்லூரி, பலி. யோவான் முதலுதவிப் படைத் தொண்டர்களுக்கும், அச்சிடலில் உதவிய தாசன் அச்சகத்தாருக்கும், கட்டைப் படம் வடிவமைத்த சிகாலை ஞானம் ஆட்ஸ் நிறுவனத்தினருக்கும், சிறப்புற விருதுகளை அமைத்துத் தந்த சுவர்ணம் பாலா தொழிலக உரிமையாளருக்கும், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் அவர்களுக்கும், பேச்சு, கவிதைப் போட்டிகளுக்கான தங்கப் பதக்கங்களை வழங்கிய யாழ். ஈஸ்வர பவான் நிறுவன உரிமையாளர் அவர்களுக்கும், யாழ். திருமறைக் கலாமன்றத்தினருக்கும், நினைவுப் பரிசில்களை நிறுவியோருக்கும், ஒலி, ஒளி அமைத்த சிக்ஸ்லேயர், றஸ்மி சவுண்ட்ஸ் நிறுவனங்களுக்கும், புகைப்பட, ஒளிப்பட ஆக்கத்தில் உதவி செய்த அஜந்தா போட்டோ நிறுவனத்தினருக்கும், நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட மதத் தலைவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், பிரமுகர்கள், நாதஸ்வர-தவில் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள் ஆகியோருக்கும், நிறை மனதோடு நிதியுதவி செய்த பெருமக்களுக்கும், பல வற்றாலும் தோளோடு தோள்நின்று துணை செய்த அன்பர்கள், சிற்பாசாரியார் ஆ. ஜீவரத்தினம், திரு த. தியாகலிங்கம் திரு க. நடராஜா ஆகியோருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி!

கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்

தி. திருநந்தகுமார், தலைவர்.
க. குமாரதாசன், செயலர்.
Dr. கு. ஸ்ரீஇரத்தினகுமார். பொருளாளர்.
[சி-8793]


# தீவுப் பகுதிக்கு தொலைபேசி வசதி

## ஹமில்டன் கூறுகிறார்

கொழும்பு. ஜூலை 28 யாழ். மாவட்டத்தின் தீவுப் பகுதிகளுக்கு தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

இராணுவ முகாம்களில் இருந்து பொலீஸாருக்கு தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்,

கூடுதல் தொலைத் தொடர்புகளை வழங்குவதில் டெலிகொம் நிறுவனம் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

பொதுத் தேர்தலை ஒட்டி இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கடந்த 19 ஆம் திகதி 15 பொலீஸார் தீவுப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று கூறிய அவர், மேலும் பல பொலீஸார் இவ் வாரம் அங்கு அனுப்பப்படுவர் என்றும் தெரிவித்தார். (இ-எ)

# வர்த்தக முகாமைத்துவ பீடம் அமைக்க அனுமதி

யாழ். பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பீடம் அமைக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இத்தகவலை உதயனுக்கு தெரிவித்தார்.

ஆரம்பத்தில், வர்த்தகம் முகாமைத்துவம் ஆகியவற்றை இருதனித் துறைகளாகக் கொண்ட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது என்று தெரிவித்த அவர் —

இதனால் முகாமைத்துவ கல்வி கற்கும் மாணவர்கள் முகாமைத்துவ துறையிலும் — வர்த்தக கல்விகற்கும் மாணவர்கள் வர்த்தகத் துறையிலும் பயில வாய்ப்பு ஏற்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

புதிய கற்கைநெறிகள் வளர்வதற்கு இந்த நடவடிக்கை உதவும் என்றும் — அவர் சொன்னார்.

மேலும் நிதியியல், கணக்கியல் துறைகள் உருவாக்குவதற்கான கருத்தும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)


பேராசிரியர்
அ. துரைராசா
## தங்கப் பதக்கங்கள்

மேற்படி பதக்கங்களை வழங்கும் பொருட்டு 1994 ஆம் ஆண்டுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பல்துறைத் திறமை வாய்ந்த பட்டதாரிகளுக்கான இப்பதக்கங்கள் கல்வியிலும், விளையாட்டிலும், ஏனைய சிறப்புச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈட்டிய சாதனைகளை மதிப்பீடு செய்து வழங்கப்படும்.

முழுப்பல்கலைக்கழகத்துக்குமென ஒரு பதக்கமும் ஒவ்வொரு பீடத்துக்கும் ஒவ்வொன்றாக நான்கு பதக்கங்களும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை (1) சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி (2) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 20, உவாட் இடம், கொழும்பு - 7 (3) யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம், ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13 ஆகிய முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

நிரப்பிய படிவங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு 1994 - 08 - 15 ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் - பல்கலைக்கழகம், 1994 - 07 -


## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28 வலிகாமம் மேற்கு உதைபந்தாட்ட சங்கத்தினால் — வலி மேற்கு வலய கழகங்களுக்கு இடையே — நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — வளர்பிறை வி.க. அணி எதிர் கலைநகர் வி க. அணி.

★ பிற்பகல் 4 மணி — மல்லாகம் கிமு சங்க அணி எதிர் அராலி பாரதி அணி.

★ பிற்பகல் 5 மணி — அராலி இக்கெஸ்ரார் அணி எதிர் அராலி அண்ணா அணி. (ஐ-20)

## ஐ. நா. அபிவிருத்தி திட்ட அதிகாரி இன்று வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 28 ஐ.நா. அபிவிருத்தி திட்ட அதிகாரியான திரு. மக்கம் இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இந்த அமைப்பு மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் குறித்து இவர் இங்கு ஆராய்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கொழும்பு செல்லும் நோயாளர் கவனத்துக்கு

இன்று வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் அவர்களுடன் கூடச்செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் இன்று காலை 11 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# தினேஷ்— சந்திரிகா டெலிவிஷன் விவாதம்

கொழும்பு: ஜூலை 28 மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் சந்திரிகாவுக்கும் இடையே கொழும்பில் டெல்ஷான் தனியார் டெலிவிஷன் நிறுவனம் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இவ்விவாதத்தில் பங்கு பற்றுவதை இரு தலைவர்களும் உறுதி செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விவாதம் நடைபெறும் நேரம் திகதி ஆகிய விவரங்களை சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு மட்டுமே தெரிவிக்க வேண்டும்; ஏனையோருக்கு தெரிவிக்கக் கூடாது என்று சம்பந்தப்பட்ட கட்சிகளின் பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்திருப்பதாக, டெல்ஷான் டி. வி. உரிமையாளர் ஷன் விக்ரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேரம் வரும் போது விவாதம் நடைபெறும் திகதி, நேரத்தை பொதுமக்களுக்கு அறிவிப்போம் — என்றும் அவர் சொன்னார்.

இதனிடையில் தம்முடன் பகிரங்க விவாதம் நடத்துவதற்கு சந்திரிகா பின்னடிப்பதாக தினேஷ் குணவர்த்தனா குற்றஞ் சாட்டியுள்ளார்.

''என்னிடம் மறைப்பதற்கு ஒன்றுமே இல்லை சந்திரிகா விவாதத்துக்கு முன்வந்தால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சொல்லைகள் தான் பகிரங்கமாகும்'' — என்றும் அவர் கூறினார். (இ-எ)

# எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிரணிக்கு ஆதரவு இல்லை

## தினேஷ் கூறுகிறார்

கொழும்பு. ஜூலை 28 எதிர்வரும் பொதுத் தேர்தலில் தொங்கு நாடாளுமன்றம் அமையும் பட்சத்தில், புதிய அரசாங்கம் அமைக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்று மக்கள் ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

முக்கியமான விஷயங்களில் மக்கள் ஐக்கிய முன்னணியின் கொள்கைகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஏற்றால் மட்டுமே தமது ஆதரவு கிடைக்கும் என்று திரு. தினேஷ் குணவர்த்தனா தெரிவிக்கிறார்.

''நாம் பதவியை எதிர்பார்க்கவில்லை. நாட்டைப் பிரிக்க முனையும் எவரையும் நாம் ஆதரிக்கமாட்டோம்'' — என்றும் அவர் கூறினார். (இ-எ)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 28 கிளிநொச்சி வன்னேரிப் பகுதி பிரதான வீதியில் கடந்த திங்கட்கிழமை காலை 9மணிக்கு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-வான் விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற பூநகரி வலைப்பாட்டைச் சேர்ந்த மீன் வியாபாரியான வலேரியன் இராசரத்தினம் (வயது 47) என்பவரே படுகாயம் அடைந்தவர் ஆவார். [க-15]

# கொழும்பு வாக்காளரிடம் இறுதி நேர வேண்டுகோள்

## வாக்களிப்புக்கு முன் ஹேமா விடுப்பார்

எதிர்வரும் பொதுத் தேர்தலின் கடைசி நிமிடத்தில் கொழும்பு மாவட்ட வாக்காளர்களுக்கு வேண்டுகோள் ஒன்றை ஹேமா பிரேமதாஸா விடுக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

பிரேமதாஸாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லக் கூடியவர் யார் என்பது என்று கருதுகிறீர்களோ அவருக்கே வாக்களிக்கும்படி தமது ஆதரவாளர்களை அப்போது அவர் கோரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில்— ஐ தே.க வேட்பாளர் பட்டியலில் இருந்து ஹேமாவின் பெயர் கடைசி நேரத்தில் அகற்றப்பட்டதை எதிர்த்து நீதிமன்ற நடவடிக்கை எடுக்கும் படி கூறப்பட்ட சட்ட ஆலோசனையை ஹேமா ஏற்கமறுத்துவிட்டார் என்று சண்டே டைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

# அரசாங்கசேவை வெற்றிடம்

கொழும்பு, ஜூலை 28 கல்வி அமைச்சில் நிலவுகின்ற முகாமைத்துவச் சேவை அதிகாரிகள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் பொருளியல், வர்த்தகம், சமூகவியல், உளவியல், சமூக மக்கட் பண்பியல், பொது நிருவாகம், வியாபார நிருவாகம், அபிவிருத்தி நிருவாகம், முகாமைத்துவ கற்கை, புள்ளிவிவர இயல், கணிதம், கணக்கியல், முகாமைத்துவ விஞ்ஞானம், இவை பாடங்களை ஆராய்ச்சி, மாவட்டதிட்டமிடல் அல்லது பொறியியல் ஆகிய சிறப்புக்கலைப் பிரிவுகளில் ... அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது —

வேலைக் கற்கை மற்றும் ஒழுங்கமைப்பு முறைமையும் தொடர்பான இலண்டன் தொழில்சார் நிலையத்தின் நிறுவனத்தின் பட்டதாரிப் பரீட்சையின் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பகுதிகளில் அல்லது இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் அல்லது இலண்டன் கிரய மற்றும் முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் தொழில்சார் மட்டத்திலான 1 ஆம் பகுதியில் சித்திய டைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 5-8-94க்கு முன் கல்விச் சேவைகள் சபைக்கு அனுப்பப்பட வேண்டும். (க)


யாழ். ஸ்ரீதரில்
இன்றும் நாளையும் மட்டும்!
மாலை: 4.00 மணிக்கு
உயிராயுதம்
மாலை: 6.00 மணிக்கு
JURASSIC PARK
இவ்விரு படங்களுடன்
போர் முரசு
படமும் காண்பிக்கப்படும்
(சி/8794)



தெல்லிப்பளை விநாயகர்
ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

2270 — 1 ஆம் பரிசு
157 — 2 ஆம் பரிசு
253 — 3 ஆம் பரிசு

1213, 189, 2364, 647, 635,
2295, 301, 1571, 2003, 214.

இச் சீட்டிழுப்பிற்கு அன்பளிப்புச் செய்தோருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தெல்லிப்பளை, விநாயகர் ஐக்கிய விளையாட்டுக்கழகம்
(7282)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இரு மாகாணங்களையும் இணைத்து வடமாகாணம் என்ற பெயரிலே தீர்வு

## பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் யுக்தி குறித்து மக்கள் ஐக்கிய முன்னணி

கொழும்பு, ஜூலை 28

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைப்பதை எதிர்ப்பதாக கூறும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, இரு மாகாணங்களையும் வடமாகாணம் என்று அழைத்து பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகக் கூறுகிறது; என்ன அருமையான யோசனை!

பிரதான கட்சிகளான ஐ.தே. கட்சி பொ.ம.ஐ. முன்னணி இரண்டுமே சிங்கள மக்களை ஏமாற்றப் பார்க்கின்றன.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் இடம்பெற்றுள்ள பிரபல கவிஞரும் எழுத்தாளருமான குணதாஸ அமரசேகரா சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் சொன்னதாவது:

இரு பிரதான கட்சிகளும் சிங்கள மக்களை முட்டாள்களாக நினைக்கின்றன. இனப் பிரச்சினைக்குத் தீர்வாக உருப்படியான யோசனைகளை இவை தெரிவிக்கவில்லை. சிங்கள மக்களை ஏமாற்றி எப்படி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது என்பது தான் இக்கட்சிகளுக்குள்ள பிரச்சினையாகும்.

இத் தேர்தலில் அஷ்ரப்பினுடைய ஆதரவைப் பெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியோ அல்லது தொண்டமானின் ஆதரவுபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியோ வெற்றி பெற்றால் அது சிங்கள இனத்தின் வீழ்ச்சியாகவும் ஐக்கிய இலங்கையின் முடிவாகவும் இருக்கும்.

இவ்விரு கட்சிகளில் எது வெற்றிபெற்றாலும், வெற்றி பீட்டியவர் அஷ்ரப்பாக அல்லது தொண்டமானாகத்தான் இருக்கப்போகின்றனர்; சிங்களவர்கள் அல்லர்.

இவ்வாறு அவர் மேலும் கூறினார். (இ-எ)

# எல்லைகளை மாற்ற பொ. ஐ. மு. முயற்சி

## விஜேதுங்கா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 28

நாட்டின் எல்லைகளை மாற்றுவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முயற்சிக்கிறது; ஐக்கிய தேசியக்கட்சி நாட்டைப் பிரிக்க அனுமதிக்காது.

ஜனாதிபதி விஜேதுங்க வெள்ளவத்தையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இனவாதத்தை நிலைநிறுத்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முயற்சிக்கிறது. மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் எதிரணி ஈடுபட்டுள்ளது; ஜனாதிபதியாக நான் இருக்கும்வரை அதற்கு இடமளிக்கப்போவதில்லை. எவரும் மக்களை அச்சுறுத்த நான் இடமளிக்கமாட்டேன் — என்றும் அவர் கூறினார். (இ-எ)

# யாழ் அருள் ஆச்சிரமம் வெள்ளிவிழா

தோலகட்டி ஆச்சிரமத்தின் செபமாலைத்தாசர் சபைத் துறவியரின் ஆன்மீக வழிபாட்டுத் தலமான யாழ். அருள் ஆச்சிரமம், ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.

இவ்வெள்ளிவிழாவை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரும் குருக்களும் இணைந்து விசேட நற்கருணை வழிபாடும், ஆராதனையும் நடத்துவர். நோயாளர்களுக்கான விசேட வேண்டுதல்களும் இடம்பெறும். (இ)

# பல்கலைக்கழகமாணவிகளை மோதிய வான் தீக்கிரை

கொழும்பு, ஜூலை 28

பேராதனைப்பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் பயிலும் தமிழ் மாணவிகள் மூவர் மீது வான் ஒன்று மோதியதில் அவர்கள் படுகாயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமை பேராதனை கலஹா வீதியால் இந்த மாணவிகள் நடந்து வந்து கொண்டிருந்த சமயம் அவர்களை வான் ஒன்று மோதியதாகவும்—

விபத்தையடுத்து வான் சாரதி ஓடவே பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று கூடி வானைத் தீக்கிரையாக்கியதாகவும்— கூறப்படுகிறது.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் மாணவிகளில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தீவுப்பகுதியில்

# 14,433 பேர் உலர் உணவு நிவாரணம் பெறுகின்றனராம்

கொழும்பு, ஜூலை 28

யாழ். மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதிகளில் 14ஆயிரத்து 433 பேர் உலர் உணவு நிவாரணம் பெற்று வருகின்றனர் என சமூக நலத்துறை மற்றும் புனர் வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் 5ஆயிரத்து 76 பேர் ஆண்கள், 6ஆயிரத்து 376 பேர் பெண்கள்; 2ஆயிரத்து 981 பேர் குழந்தைகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் சுமார் 6ஆயிரம் பேர் வாக்களிக்கும் தகைமை பெற்றுள்ளனர் என்று 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

'சண்டே ஐலண்ட்' தகவலின் படி தீவுப் பகுதிகளில் தற்போது குடியிருப்பவர்களின் எண்ணிக்கை வருமாறு:

| | | |
|---|---|---|
| நெடுந்தீவு | — | 4,688 |
| நயினாதீவு | — | 4,233 |
| அனலைதீவு | — | 2,587 |
| எழுவைதீவு | — | 572 |
| புங்குடுதீவு | — | 857 |
| காரைநகர் | — | 840 |
| ஊர்காவற்றுறை | — | 144 |
| மண்டைதீவு | — | 43 |
| வேலணை | — | 255 |

(இ-எ)

# பல்கலைக்கழக அனுமதி முதலாம் படிவங்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 28

பல்கலைக்கழக அனுமதி கோருவதற்குத் தேவையான முதலாம் படிவங்கள் மேலதிகமாகக் கொழும்பிலிருந்து வந்துள்ளன. முன்பு இப்படிவங்களைப் பெறத் தவறியவர்கள் இவற்றை யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையிலே பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

பூர்த்திசெய்த படிவங்களை அவரவர் தனிப்பட்ட முறையிலே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில்

# எழுத, வாசிக்க தெரியாத 2 ஆயிரத்து 500 மாணவர்

## விசேட வகுப்புகள் நடத்த ஏற்பாடு

அச்சுவேலி ஜூலை 28

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் பின்தங்கிய "மெல்லக் கற்கும்" மாணவர்களுக்கு விசேட எழுத்தறிவூட்டல் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

கோப்பாய்க் கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் பாடசாலைகள் தோறும் நேரடியாகச் சென்று ஒவ்வொரு பாடசாலையிலும் எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர் பற்றிய விவரங்களைத் திரட்டி வருவதுடன், எழுத்தறிவூட்டல் வகுப்புகள் மூலம் அறிவூட்டுவதற்கும் ஏற்பாடு செய்து வருகின்றார்.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் ஆண்டு 10வரையுள்ள வகுப்புக்களில் 2 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட மாணவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாத நிலையில் இருப்பதாக இனம் காணப்பட்டு, அவர்களுக்கு பாடசாலை நேரம் தவிர்ந்த நேரத்தில் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. (எ-11)

# தொண்டை அடைப்பான்; மாடுகளுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 28

மாடு வளர்ப்போரின் நன்மைகருதி மாடுகளுக்கு ஏற்படும் தொண்டையடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பூசியை இலவசமாக போடும் நடவடிக்கையை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையிலேயே மாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நோய்க்கிருமிகள் மழை ஆரம்பித்தவுடன் மாடுகளை தாக்கத் தொடங்குகின்றன. இதனால் மாடுகள் ஒரு நாட்களில் இறந்துவிடக் கூடிய அபாயநிலை ஏற்படுகின்றது.

வன்னிப் பிரதேசங்களில் அநேகமாக காணப்படும் இந்நோய் அங்கிருந்து மாடுகள் இறைச்சிக்காக கொண்டு வரப்படுவதால் யாழ். குடாநாட்டிலும் பரவுவதற்கான சூழ்நிலை காணப்படுகின்றது.

வேகமாகப் பரவக்கூடிய இத்தொற்றுநோய்க்கு அறிகுறியாக தொண்டை வீங்குதல், காய்ச்சல், உணவு உட்கொள்ள முடியாமல் படுத்திருத்தல் என்பன காணப்படும். நோய் தொடங்கி 24 - 48 மணித்தியாலயத்திற்குள் மாடுகள் இறந்துவிடும் என்பதுடன் நோய் அறிகுறிகள் தென்பட்ட பின்பு எந்த விதச் சிகிச்சையும் பலனளிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே வருடத்துக்கு ஒரு முறை இதற்கான தடுப்பு ஊசியை போட்டு தங்கள் மாடுகளை காப்பாற்றிக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கால்நடை வளர்ப்போருக்கு அறிவித்துள்ளனர். (ஒ)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

குட்டியப்புலம் அ. த. க. பாடசாலையில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற கலைவிழாவில் கலைஞர் எஸ், ஜி. சாந்தன் நடிகலாமணி வீ. செல்லம் ஆகியோர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு கி. வேலாயுதத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்கள். (க)

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு தேவையான பொருள் தேக்கம்

## கப்பல் வசதி செய்து கொடுக்கப்படவில்லையாம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். பல்கலைக்கழகத்துக்கு தேவையான 100 மெற்றிக் தொன் பொருள்கள் கப்பல் வசதி இன்றி கடந்த ஏழு மாதங்களாக கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகஆய்வு கூடத்துக்கு தேவையான இரசாயனப்பொருள்கள் மற்றும் உபகரணங்களும்—

காகிதாதிகள் வகைகளும் இவற்றுள் அடங்கும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு கப்பல் வசதிசெய்து கொடுக்காததே இதற்குக் காரணம் என்று பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

# அகதி முகாம்கள் புனரமைப்புக்கு ரூ. 30 லட்சம் நிதி

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களை புனரமைக்க 30 லட்சம் ரூபாவை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார்.

# எம் மண்ணுக்கு விடிவு ஏற்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் அரசண்ணா

சாவகச்சேரி ஜூலை, 28

"சிலர் போன்றவர்கள் தொடக்கிவைத்த பயணம் விரிவடைந்து பரவி உன்னதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது எனவே எம் மண்ணுக்கு விடிவு ஏற்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை"

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர் அரசண்ணா இவ்வாறு கூறினார். லெப்டினன்ட் சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 11ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்திலும் அவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட பூங்காவின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவிலும் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கூட்டம் அண்மையில் மீசாலையில் உள்ள சீலன், ஆனந் நினைவுப்பூங்கா வளவினுள்ளே கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் அமுதன் தலைமையில் நடைபெற்றது.

அரசண்ணா மேலும் பேசுகையில் கூறியதாவது:

தற்போது ஸ்ரீலங்கா அரசு வன்னி, யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணம் ஆகிய பகுதிகளில் தேர்தலை நடத்த இருக்கிறது. 1977 இல் வாக்கும் போட்டு பிரதிநிதிகள் வந்தார்கள். 1994 இல் வாக்குப்போடாமல் பிரதிநிதிகள் வரவிருக்கிறார்கள்.

ஸ்ரீலங்காவின் முக்கியமான கட்சிகள் இரண்டும் இத்தேர்தலில் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. அரசியல் தீர்வுக்கு அரசு அஞ்சுகிறது. எதிர்காலத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தை வேறு நாட்டின் மேற்பார்வையிலேயே நடக்க வேண்டும்— என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மூத்த உறுப்பினர் தேவர், திருமலை மாவட்டத் தொடர்பகப் பொறுப்பாளர் தங்கன் மகளிர் அமைப்பைச் சேர்ந்த தமிழ்க்கவி ஆகியோரும் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் கூட்டத்தில் இடம்பெற்றன. (எ-31)

# பயன்தரும் முருங்கையை பயிரிடுமாறு ஆலோசனை

## நடுகைக்கு ஏற்ற காலம் இதுவே

இன்று விலை கூடிய மரக்கறியாக முருங்கைக்காய் உள்ளது சந்தையில் ஒரு கிலோ முருங்கைக்காய் 100 ரூபாவுக்கு மேல் விலை போகின்றது

ஆனால் முருங்கையை எந்த விதப் பராமரிப்பும் இன்றி வான் பார்த்த பயிராக மிக சுலபமாக பயிரிடமுடியும்.

துண்டங்கள் மூலம் நல்லின முருங்கைத் துண்டங்களை நட்டு முருங்கையை உண்டாக்கலாம். மிக பொருத்தமான நடுகைக்காலம் ஜூலை மாதமாகும்.

நம் முதாதையர் ஆடி அமாவாசைக்கு முருங்கை நடும் வழக்கத்தை கொண்டிருந்தனர்.

நாம் முருங்கையை நடுவதன் மூலம் காய் கிடைப்பதுடன் அதன் இலையையும் மரக்கறியாக பயன்படுத்த முடியும்.

முருங்கை வளமற்ற கல் உள்ள, பயன்பாடற்ற நிலங்களிலும் வளரக்கூடியது. ஆகவே தமிழீழ மக்கள் அனைவரும் தமது வளவுகளில் முருங்கையை கூடியளவு நட வேண்டும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கு அறை தேவை. திருநெல்வேலியில் அல்லது அண்மித்த பகுதியில் இருப்பது விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்புகொள்ளவும். இல. 673, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32083)

### பொருளியல்

A/L பரீட்சைக்கு உதவக்கூடிய வினா விடைகளைக் கொண்டது. ஆசிரியர்: வே. கருணாகரன். கிடைக்கும் புத்தகசாலைகள்: பரமசிவம், சாவகச்சேரி, மொடேர்ன், நெல்லியடி, துர்க்கா கன்னாகம், நாவலபாலன் மானிப்பாய், பிரபல புத்தகசாலைகள் யாழ்நகர். சொற்பபிரதிகளே உண்டு. (32109)

## திருக்குறள் போட்டிகள்

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் ஆண்டுதோறும் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் போட்டிகள் 30 ஆம் 31 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (க—45)

---

அம்பாள் துணை

கல்வியங்காடு

## அருள்மிகு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் கோயில்

அம்பிகை அடியார்களே!

இவ்வருடம் 29 - 07 - 1994 வெள்ளிக்கிழமை பகல் 10-00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று தொடர்ந்து 12 தினங்கள் மஹோற்சவம் நடைபெற அம்பிகை அருள் பாலித்துள்ளார்.

மஹோற்சவ குரு:
பிரம்மஸ்ரீ சதாயோகீஸ்வரக் குருக்கள்

### விஷேச உற்சவங்கள்

1ஆம் நாள் 29 — 07 — 1994 வெள்ளிக்கிழமை
துவஜாரோகணம்

8ஆம் நாள் 05 — 08 — 1994 வெள்ளிக்கிழமை
இரவு மஞ்சத் திருவிழா

9ஆம் நாள் 06 — 08 — 1994 சனிக்கிழமை
இரவு குதிரை வாகனத் திருவிழா

10ஆம் நாள் 07 — 08 — 1994 ஞாயிற்றுக்கிழமை
இரவு சப்பறத் திருவிழா

11ஆம் நாள் 08 — 08 — 1994 திங்கட்கிழமை
காலை தேர்த் திருவிழா

12ஆம் நாள் 09 — 08 — 1994 செவ்வாய்க்கிழமை
காலை தீர்த்த உற்சவத் திருவிழா
அன்று மாலை திருவூஞ்சல் துவஜாவரோகணம் (கொடி இறக்கம்) சண்டேஸ்வரி உற்சவம் என்பன நடைபெறும்.

அம்பிகை அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்

பொ. கிருஷ்ணமூர்த்தி,
ஆலய நிர்வாகம்.

சு. பாலசுப்பிரமணிய ஐயர்,
ஆலய உரிமையாளரும் ஆதீன கர்த்தாவும்.

[32112]

---

## நன்றி நவில்கின்றோம்



15 - 07 - 1994 வெள்ளிக்கிழமை அன்று இனிது நடந்தேறிய எமது மகன்

### செல்வன் இரா. பிரசாந்த்

அவர்களின்

மிருதங்க அரங்கேற்றத்துக்கு


அனுசரணையாக இருந்த குரு திரு. எம். சிதம்பரநாதன் அவர்களுக்கும், இசைக்கலைஞர்களுக்கும், இந்நிகழ்விற்குத் தலைமை வகித்த விழாத்தலைவர் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், அரசாங்க அதிபர், கல்லூரி அதிபர் ஆகியோருக்கும், இந்நிகழ்வை நடத்துவதற்கு மண்டபத்தைத் தந்துதவியதுடன் மதிப்புரை வழங்கிய இளங்கலைஞர் மன்றத் தலைவர் அவர்களுக்கும், இந் நிகழ்வின் நிறைவிற்குப் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்த நண்பர்கள், உறவினர்கள், கலைஞர்கள், அன்பர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. சே. இராஜேஸ்வரன்.
டாக்டர் (திருமதி) எஸ். இராஜேஸ்வரன்.

(32101)

---

## ஓராண்டு நினைவஞ்சலி ஈராண்டு நினைவஞ்சலி





| தில்லையம்பலம் சிவசுப்பிரமணியம் | திருமதி புஷ்பராணி சிவசுப்பிரமணியம் |
|---|---|
| மலர்வு: 26 — 06 — 1943 | 20 — 05 — 1944 |
| உதிர்வு: 08 — 08 — 1993 | 15 — 04 — 1992 |

உங்கள் அன்பும் அரவணைப்பும் எம்மை விட்டு அகலாதவை
உங்கள் ஆசியும் அறிவுரையும் என்றும் எம்மை வழிநடத்தும்

பாசமிகு பிள்ளைகள்:
சி. சிவகௌரி, சி. சிவராணி.

''அபோத்தி'',
அச்செழு, நீர்வேலி.

[32103]


---

## நினைவஞ்சலிகள்

### 11-ம் ஆண்டு 10-ம் ஆண்டு 9-ம் ஆண்டு







| ந. நவரத்தினராசா (T. O.) | ந. ருக்மணி | க. லட்சுமிப்பிள்ளை |
|---|---|---|
| தோற்றம்: 05 — 06 — 1953 | 09 — 04 — 1962 | 10 — 02 — 1914 |
| அகால மரணம்: 28 — 07 — 1983 | அகால மரணம்: 28 — 07 — 1984 | மறைவு: 12 — 12 — 1985 |

உங்கள் பிரிவை துயரத்துடன் நினைவு கூரும்:

அப்பா, அம்மா,
சகோதர, சகோதரிகள்,
அத்தான்மார், மக்கள், மருமக்கள்.

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

வாரிக்காடு,
முள்ளியவளை, பளை;

[32111]

---

புகைப்படக் கலைஞர்களுக்கு
ஓர் பெரும் வாய்ப்பு!

உங்கள் கலை வெளிக்கொணர்விற்கும்;
திறமைக்குமான ஓர் சந்தர்ப்பம்!!

## தமிழீழ விடுதலைப் புலிகளின் புகைப்படப் பிரிவினரால்

நடத்தப்படும்

## புகைப்படப் போட்டி

**15-07-94** தொடக்கம் **15-10-94** வரை

விண்ணப்பங்களுக்கும், விபரங்களுக்கும் கீழ்க்காணும் இடங்களை நாடுங்கள்:

திரு. சு. தங்கத்துரை,
ப்ரியா வீடியோ,
புலோலி, மந்திகை.

ராஜேஸ் ஸ்ரோன் வீடியோ & ஸ்ருடியோ
கண்டி வீதி, சாவகச்சேரி.

உதயம் ஸ்ருடியோ,
அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

கலை ஊடக இணையம்,
117, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக ஆலோசனைகளுக்கு:
புகைப்படப் பிரிவு (அருச்சுனா), திருநெல்வேலி.

| | |
|---|---|
| முதல் பரிசு:- | தங்கப் பதக்கமும் பணப் பரிசும் |
| இரண்டாம் பரிசு:- | வெள்ளிப " " |
| மூன்றாம் பரிசு:- | வெண்கலப் " " |

★ தெரிவு செய்யப்படும் மேலும் 27 புகைப்படங்களுக்கு தேசிய மட்டத்திலான பெறுமதி வாய்ந்த பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை ரூ. 20/- செலுத்தி பெற்றுக் கொள்ளவும்:

புகைப்படப் பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(31881)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தொட்டில் பழக்கம் மாறாதே!

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்— என்பது முதுமொழி.

கடந்த பதினேழு வருடங்களாக ஆளுங்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களோ அல்லது அரசியல்வாதிகளோ இதற்கு விதிவிலக்கல்லர்.

பேரினவாத நிலைப்பாட்டில் தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில், ஐக்கிய தேசியக்கட்சி தொட்டில் பழக்கத்தை மாற்றுவதாக இல்லை. அது சுடுகாட்டுக்குப் போகும் வரை இலங்கை சிங்களவர் தனிநாடு; அவர்களுடன் தமிழர்கள் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு இடம்கொடுக்க முடியாது என்ற கொள்கையையே இறுகப் பிடித்துக் கொண்டிருக்கப் போகிறது. காலத்துக்கும் உலகச் சூழ்நிலைக்கும் ஏற்ப தன்னையும் தனது பழக்கத்தையும் மாற்றும் எண்ணம் அதற்குச் சிறிதளவேனும் இல்லை.

வடக்கிலும் - கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களுக்கு இப்போதுள்ளதை விட கூடுதல் தன்னாட்சி அதிகாரம் எதனையும் வழங்க முடியாது. தமிழர்களுக்கு இனியும் கூடுதல் அதிகாரம் வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை. அதற்கு ஒரு போதும் இணங்கவும் மாட்டாது—

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்துக் கூறியிருப்பது தமிழர்களை இரண்டாந்தரப்பிரஜைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற கொள்கையை - பழக்கத்தை — தறக்கத் தயாரில்லை என்பதனையே உறுதி செய்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்தோ, இனப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்தோ திட்டவட்டமாக எதுவும் பேசப்படவில்லை.

ஆனால் வடக்கு - கிழக்கு இணைப்பை அனுமதிக்கப் போவதில்லை என்பதனையும் அரசியல் தீர்வு சாத்தியமில்லை என்றால் இராணுவத் தீர்வு என்பதனையுமே விஞ்ஞாபனம் தொட்டுக் காட்டுகிறது.

இவற்றுக்கு மேலாக, இப்போதுள்ள தன்னாட்சி அதிகாரத்தை விரிவாக்கும் எண்ணம்கூட இல்லை என்பதனை கட்சிச் செயலாளர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இப்போதுள்ள தன்னாட்சி அதிகாரம் என்று விஜேசேகரா கருதுவது - கூறுவது - மாகாண சபையையே. அந்தச் சபைக்கு தன்னாட்சி அதிகாரம் பத்துச் சதவீதமேனும் உண்டா என்பது கேள்விக்குறியது.

தமிழர் தரப்பில் மட்டுமன்றி சிங்களவர் தரப்பிலும் (சந்திரிகா போன்றவர்களால்) அந்த உண்மை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்க, இப்போதிருக்கும் தன்னாட்சி அதிகாரத்துக்குக் கூடுதலாகத் தமிழர்களுக்கு வழங்க முடியாது என்று கூறப்படுவது—

ஐ. தே. கட்சி தமிழர் பிரச்சினையை நியாயமாகத் தீர்க்க விருப்பமில்லை; தான் நினைத்த தீர்வை தமிழர்களை எப்போதும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே அடிமைகளாகவே வைத்திருக்கக் கூடிய தீர்வை, இராணுவ பலத்துடன் திணிப்பதே அதன் நோக்கம் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்காவின் மரங்கொடிக் "கோட்பாட்டின்", பிரதிவிம்பமே இது. நான்கு வருடப் போரின் பின்னரும் ஐ.தே.க. பேரினவாதச் சகதியிலேயே இன்னும் மூழ்கித் திளைக்கிறது. உலக நடப்பியலையோ, மனித வியலையோ உணராத நிலையில், தனக்கென ஒரு தனி வழியில் சஞ்சரிக்கிறது. எனவே தமிழருக்கு எதிரான தனது தொட்டில் பழக்கத்தை சிங்கள அரசியல் வானில் இருந்து விரட்டப்படும் வரை — சாகும் வரை — ஐ.தே.க. மாற்றாது என்பதனை தமிழர்களுக்கு மீண்டும் உணர்த்தியிருக்கிறது. அவ்வளவு தான்!

# லண்டனிலுள்ள இஸ்ரேல் தூதரகம் மீது கார்க் குண்டுத் தாக்குதல்!

## ஹுசேய்ன்- ரபீன் ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு

லண்டன், ஜூலை 28

வாஷிங்டனில் ஜோர்தான் மன்னர் ஹுசேய்னுக்கும் இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ரபீனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக லண்டனில் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

மேற்கு லண்டனில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தில் இடம் பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 14 பேர் காயம் அடைந்தனர். லண்டனில் மற்றும் ஓர் இடத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் நால்வர் காயம் அடைந்தனர்.

இஸ்ரேல் தூதரகத்துக்கு அருகில் பெண் ஒருவர் கார் ஒன்றைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டுச் சென்றார் என்றும் —

அவர் சென்ற சிறிது நேரத்தில் குண்டு வெடித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

50 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்ட அந்தப் பெண்ணைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஸ்கொட்லாண்ட் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் ஆர்ஜென்ரீனாவின் தலைநகரான புவர்ஸ் அயர்ஸில் உள்ள யூத நிலையம் ஒன்றும் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகியது.

லண்டன், புவர்ஸ் அயர்ஸ் தாக்குதல்கள் குறித்து ஜோர்தானிய மன்னர் ஹுசேய்னும், இஸ்ரேல் பிரதமர் ரபீனும் கருத்துத் தெரிவிக்கையில், இந்த குண்டுத் தாக்குதல்களினால் தமது சமாதான முயற்சிகளை தடுத்து விடமுடியாது என்று தெரிவித்தனர்.

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனும் இத் தாக்குதல்களைக் கண்டித்துள்ளார்.

இதற்கிடையில் ஜோர்தானுக்கு சலுகையாக அமெரிக்காவுக்கு ஜோர்தான் செலுத்த வேண்டிய பெரிய கடன் தொகையை ஜனாதிபதி கிளின்ரன் தள்ளுபடி செய்துள்ளார். (இ)

## ஏ. ஜே. ரணசிங்காவும் 'குக்குலு மரிலா'வும்

கொழும்பு, ஜூலை 28

சடுவெல ஐ. தே. க. அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா, பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் தாம் 'குக்குலு மரிலா' என்ற பாடலைப் பாடிக் கொண்டு தமது தொகுதி முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிறார்.

இப் பாடல் கோழிக்குஞ்சு ஒன்றைப் பறிகொடுத்த கிராமவாசி ஒருவரைப் பற்றியதாகும்.

கோழிக்குஞ்சைத் திருடியவனைத் தண்டிக்கும்படி கதிர்காமத் தெய்வத்தை அக் கிராமவாசி வேண்டுவதாக அப் பாடல் அமைந்துள்ளது (இ-எ)

# பிரேமாவுக்கு கெட்டகாலம் என்றால் ஹேமா நுவரெலியாவுக்கு சென்றது ஏன்?

## சங்கதாஸா கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 28

பிரேமதாஸாவுக்கு கெட்டகாலம் என்று தெரிந்திருந்த ஹேமா, அவர் படுகொலையுண்ட தினம் அவரை கொழும்பில் தனியே விட்டுவிட்டு நுவரெலியாவுக்குச் சென்றதேன்?

கொழும்பு மாவட்டத்தில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடும் ரி. எம். சங்கதாஸா 'சண்டே ரைம்ஸு'க்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய தேர்தலில் சங்கதாஸாவுக்கு வேட்புமனு கொடுக்கக் கூடாது என்று ஹேமா ஐ. தே. க. தலைமைப் பீடத்தை வற்புறுத்தி வந்தது தெரிந்ததே. எனினும் ஹேமாவின் கோரிக்கையை நிராகரித்து, சிறிசேன கூரேயின் தீவிர ஆதரவாளரான சங்கதாஸா வேட்பாளராக நியமிக்கப்பட்டார்.

சங்கதாஸா பேட்டியில் மேலும் சொன்னதாவது:

பிரேமதாஸாவை ஹேமா திருமணம் செய்திருந்தார் என்றாலும், அவருக்காக ஹேமா என்ன செய்துள்ளார் என்று நீங்களே கூறுங்கள். பிரேமதாஸாவுக்கு காலம் கூடாது என்று தெரிந்திருந்த ஹேமா ஏன் அவரை மேதினமன்று தனித்து செயல்பட விட்டார்.

பிரேமதாஸாவுக்காக நான் சிறைக்குப் போகவும் தயாராக இருந்தேன். ஹேமா என்ன செய்தார்? வாரியபொலயில் ஜே. ஆருடன் அவர் மனைவி வாழ்வது போன்று 'சுசரித்த'வில் பிரேமாவுடன் ஹேமா வாழவேயில்லை.

கேள்வி; அப்படியானால், பிரேமதாஸாவுக்கு மிகவும் விருப்பமான வெங்காயச் சம்பலை ஹேமா தயாரித்துக் கொடுக்கவில்லை என்றா கூறுகிறீர்கள்?

சங்கதாஸா; பிரேமதாஸாவுடன் வாழாத ஹேமா எப்படி வெங்காயச் சம்பலை தயாரித்துக் கொடுக்க முடியும்? சமையல்காரர் தான் அதனைத் தயாரித்துக் கொடுத்து வந்தார். அதனால் தான் ஹேமா தனது கணவன் மீது அன்பு செலுத்தவில்லை என்று பிரசாரக் கூட்டம் ஒன்றில் தெரிவித்தேன்.

சாதாரண சார்லட் நோனா கூட, தனது கணவன் ஜேமிஸ் அப்புவுக்கு கூடாத காலம் நடக்கின்றது என்று அறிந்த பின்னர் அவரை விட்டுவிட்டு வெளியூர் செல்வார் என்று எண்ணுகிறீர்களா? — இப்படி சங்கதாஸ கேட்டார். (இ-எ)

# ஜே. வி. பி. வேட்பாளருக்கு பாதுகாப்பு வழங்குக

## ரோஹணவின் சகோதரி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 28

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஜே. வி. பி. வேட்பாளர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குமாறு ரோஹண விஜேவீராவின் சகோதரியான சித்ராணி விஜேவீரா ஜனாதிபதி விஜேதுங்காவிடம் கோரியுள்ளார்.

தமது சகோதரர் விஜேவீராவின் அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் பாதுகாக்கப்பட்டு வந்த ஜே. வி. பிக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு ஜனாதிபதிக்கு எழுதிய மூலமான கோரிக்கையை சித்ராணி சமர்ப்பித்திருப்பதாக தேசிய மீட்பு முன்னணியின் பொதுச்செயலாளர் ஆரியபுலேகொட 'லங்காதீப'வுக்கு தெரிவித்தார். (ஐ-எ-6)

# அமெரிக்காவில் ரூ. 61 லட்சம் 'கிறெடிற் கார்ட்' மோசடி

## இலங்கைப் பேராசிரியர் கொழும்பில் கைது

அமெரிக்காவில் வங்கிக் கடன் அட்டை ("கிறெடிற் காட்") மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இலங்கைப் பேராசிரியர் ஒருவரை பேராதனையில் இரகசிய பொலீஸின் இன்ரபோல் பிரிவு கைது செய்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் அவர் கொழும்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவதற்குரிய சட்டநடவடிக்கைகளை பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

அவர் அமெரிக்காவில் தங்கியிருந்த காலத்தில் 'கிரெடிற் காட்டை' பயன்படுத்தி இலங்கைப் பணத்தில் 61 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு லட்சத்து 25 ஆயிரம் டொலர்களை மோசடி செய்ததாக அமெரிக்க சமஷ்டி புலனாய்வுப் பிரிவு குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்க அரசின் கோரிக்கை மீதே இப் பேராசிரியர் பேராதனையில் வைத்து கைது செய்யப்பட்டார் (இ-எ)

# சு.கவின் யோசனை குறித்து தமிழர் கூட்டணி அதிருப்தி!

வடக்கு - கிழக்கு இணைப்புப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணுமுகமாக கிழக்கு மாகாணத்தின் தற்போதைய எல்லைகளை மீள நிர்ணயிப்பது தொடர்பாக சுதந்திரக் கட்சி தெரிவித்த யோசனை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அதிருப்தி அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

கிழக்கு மாகாண எல்லைகளை மீள நிர்ணயிப்பது குறித்தும், போதுமான அதிகாரப்பரவலாக்கலை உறுதி செய்யக்கூடிய அரசமைப்பு வடிவம் பற்றியும் தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திரக்கட்சியின் பிரமுகர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுடன் பேச எடுத்த முயற்சி ஏமாற்றத்தில் முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக, கொழும்பு தமிழ்க் குழுக்களுடன் ஆரம்பத்தில் பேச்சுக்கள் நடத்திய சு. க. பிரமுகர்களுடன் இப்போது தொடர்புகொண்டு பேச்சுக்களை தொடரமுடியாத நிலை அத்தமிழ்க்குழுக்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் குழுக்களுடன் தொடர்பு கொண்டு பேச்சு நடத்த நேரம் கிடைக்கவில்லை என்று சு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் சினமடைந்த கூட்டணித் தலைவர் எம் சிவசிதம்பரம், கடந்த நான்கு வருடங்களாக இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணுவது என்பது குறித்து சுதந்திரக்கட்சி ஒருபோதும் கூறவில்லை என்று தெரிவித்தார்.

இதன் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் குமார்பொன்னம்பலம் தலைமையிலான சுயேச்சைக்குழுவுக்கு ஆதரவளிக்கப் போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி [illegible] 'சண்டே ரைம்ஸ்' [illegible] வது (ஐ-எ)



அனுரா

# தேர்தலில் ஐ. தே. க. வெற்றியீட்ட அனுரா என்ன செய்ய வேண்டும்?

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்ட வேண்டுமானால் அனுரா பண்டாரநாயக்கா மீண்டும் சுதந்திரக் கட்சியில் சேர வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எதிர்வரும் தேர்தலில் ஐ. தே. க. வெற்றியீட்ட நான் என்ன செய்ய வேண்டும்?" — என்று அனுரா பண்டாரநாயக்கா கேட்டதற்கு—

ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் டாக்டர் விக்ரம வீரசூரியா, "நீங்கள் மறுபடியும் சுதந்திரக் கட்சியில் சேர வேண்டும்" என்று பதிலளித்தார் என்று 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

டாக்டர் வீரசூரியா நகைச்சுவையாக இதனைக் கூறினார் என்றாலும் அனுரா உண்மையில் மனம் நொந்து போனார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மாளிகையில் அனுராவும் வீரசூரியாவும் சந்தித்துக் கொண்டபோதே இந்த உரையாடல் இடம் பெற்றது. (இ-எ)

## புலிகளின் குரல் வானொலியில்

27 - 07 - 1994

வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்

★ 8-10 — உரை — நாடகம் கல்வி

★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் நவத்தார் குடும்பம் குறுநாடகம்

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — ஏட்டிலிருந்து — தேர்ந்த கட்டுரை என்ற நூலிலிருந்து "செத்து இணைந்தவர்களும் விலக்கிய இனத்தவர்களும் தாங்கள் பிரிந்து செல்லும் நாளை எதிர்பார்த்திருக்கின்றார்கள்" எனும் கட்டுரையின் சில பகுதிகள்

★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

28 - 07 - 1994

வெள்ளி காலை

★ 7-03 — மாவீரர் வணக்கம்

★ 7-15 — விடுதலை கானங்கள்

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# இனப்பிரச்சினை தீர்வில் அரசின் முயற்சி போதாது

## 57 சதவீதமானோர் கருத்து

கொழும்பு, ஜூலை 28

அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் இணைந்து சண்டே ரைம்ஸ் பத்திரிகை நடத்தும் பொதுத்தேர்தல் தொடர்பான முதலாவது ஆய்வில்—

நாட்டில், ஆளும் கட்சிக்கு எதிரான போக்கே காணப்படுவதாகக் கண்டுபிடித்துள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் தற்போதைய அரசாங்கம் இன்னும் நன்றாகச் செயற்பட்டிருக்க வேண்டும் என்று சிங்கள மக்களில் 57. 2 சதவீதமானோர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர்.

பொருளாதாரத் துறையில் அரசு இன்னும் திறம்பட பணியாற்றியிருக்கலாம் என்று 60 8 சத வீதமானோர் கருத்துவெளியிட்டுள்ளனர்.

நாட்டின் தலைவராக இருப்பவர் புத்திக்கூர்மையுள்ளவராக இருக்க வேண்டும் என்று 33 சத வீதமானோர் கருதுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

19. 4 சத வீதமானோரே நாட்டுத் தலைவர் நேர்மையானவராக இருக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

15 3 சத வீதமானோர் நாட்டுத் தலைவர் நல்ல இராணுவத் தளபதியாக இருக்க வேண்டும் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் தலைவர் பலமானவராக இருக்க வேண்டும் என்று 11 5 சத வீதமானோரும்—

நல்ல குணங்கள் பொருந்தியவராக இருக்க வேண்டும் என்று 14. 8 சத வீதமானோரும்—

கட்சிக்கு விசுவாசமானவராக இருக்க வேண்டும் என்று 14. 9 சத வீதமானோரும் — இந்த ஆய்வில் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ-எ)

## எதிர்வரும் தேர்தலில் குமாரின் சுயேச்சைக்குழு 5 ஆசனங்கள் பெறுமாம்

கொழும்பு, ஜூலை 28

கொழும்பு மாவட்டத்தில் குமார் பொன்னம்பலம் தலைமையில் போட்டியிடும் சுயேச்சைக் குழு, எதிர்வரும் தேர்தலில் குறைந்தது ஒன்றரை லட்சம் சிறுபான்மை இன மக்களின் வாக்குகள் தமக்குக் கிடைக்கும் என்றும்—

புதிய நாடாளுமன்றத்தில் ஐந்து ஆசனங்கள் தங்களுக்குக் கிடைக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இக்குழு வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில்— வடக்கு- கிழக்கில் உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியுள்ளது.

இனப்பிரச்சினை சம்பந்தமாக நிபந்தனை அற்ற பேச்சுகள் நடத்துவது, இலங்கையை மதசார்பற்ற நாடாகப் பிரகடனம் செய்வதற்கான அரசமைப்புத் திருத்தத்தை கொண்டுவருவது— ஆகியவற்றை நிறைவேற்ற செயற்படப் போவதாகவும் இச் சுயேச்சைக்குழு தெரிவித்துள்ளது. (இ-எ)

## பாடசாலை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா கடந்த 12 ஆம் திகதி அதிபர் திருமதி சசோமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. யாழ்.வலயம் 1 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு கி. வேலாயுதம் கலந்து கொண்டார். (க)

# சிறுபான்மையினர் பின்னால் செல்லும் அரசியல் கட்சிகள்

## மகாநாயக்க தேரர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 28

தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக எல்லா அரசியல் கட்சிகளும் சிறுபான்மை இனங்களின் பின்னால் செல்லும் அபாயகரமான போக்கு நாட்டில் உருவாகி வருகிறது.

அஸ்கிரிய பீடாதிபதி பலிபான சந்தானந்த மகாநாயக்கதேரர் இப்படி எச்சரித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமானும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் தங்கள் கைகளில் 5 லட்சம் வாக்குகள் இருக்கின்றன என்று கூறி நாட்டைப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது சிங்கள இனத்தை ஆபத்தில் மாட்டிவிடும் என்றும் மகாநாயக்கதேரர் கூறினார்.

தம்மைச் சந்தித்த மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவிடம் மகாநாயக்கர் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

# புதிய அரசமைப்பின் கீழ் மாகாண நிர்வாக முறை

## சந்திரிகா மாவனெல்லவில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

தற்போதைய அரசமைப்பு மாற்றப்படும். புதிய மாகாண நிர்வாக முறை உருவாக்கப்படும்.

மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க மாவனெல்லையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் மக்கள், பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

"நாட்டின் இறைமை, ஐக்கியத்தை நாம் பாதுகாப்போம். வடக்கு - கிழக்கை இணைக்கும் திட்டம் முன்னணியிடம் இல்லை" — என்றும் அவர் கூறினார்.

# பல்கலைக் கழக ஊழியர் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்கள் தங்களுக்கு உடனடியாக ஓய்வூதியத் திட்டம் ஒன்றை அமுல் நடத்தும்படி கோரி வேலை நிறுத்தத்தில் நேற்று முன்தினம் முதல் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேலை நிறுத்தத்தில் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு, இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரிகள் யாழ். பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்கள் கலந்து கொள்ளவில்லை.

இவ்வேலை நிறுத்தத்தினால் அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கோரிக்கை நிறைவேறும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அமரசிங்கம் நாகராஜா

அமரசிங்கம் நாகராஜா (இளைப்பாறிய Anti – Malaria Office உத்தியோகத்தர்) நேற்று (27-7-94) மானிப்பாயில் காலமானார்.

இவர் அமரர் அமரசிங்கம் - செல்லமுத்து ஆகியோரின் மகனும், சங்கானை (இளைப்பாறிய Post Master) அமரர் நடராசா - இரத்தினம் ஆகியோரின் மருமகனும், திருமதி இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், றஞ்சிட்குமார், அனுசுயா, அஜந்தா, அருந்ததி ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தாதேவி, மனோகர் ஆகியோரின் மாமனாரும், தர்சன், பிரசாந்தி, நிசாந்தன், ஜனதன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-7-94) வியாழன் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
றஞ்சிட்குமார் (மகன்)
லோட்டன் வீதி,
மானிப்பாய். (32123)

திருமதி
## ஞானபுஷ்பம் சிவநாதன் (குணமணி)

பாண்டியந்தாழ்வைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானபுஸ்பம் சிவநாதன் (குணமணி) காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி பிரட்றிக் அந்தோனிப்பிள்ளையின் (சின்னத்துரை) மகளும், காலஞ்சென்ற M. P. A சிவநாதனின் (பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி எலிசபெத் பஸ்தியாம்பிள்ளை, திருமதி யூரேஷியா பீற்றர் ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஷெறீனின் அன்புத் தாயாரும், யூட் செல்வகுமாரின் (ஆசிரியர் - யாழ் பரியோவான் கல்லூரி) அன்பு மாமியாரும், நிரோஜன், ஆன் நிரோஷினியின் அன்புப் பேர்த்தியுமாவார்

பூதவுடல் இன்று வியாழக்கிழமை பி ப. 3 30 மணிக்கு நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து பரி. சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்:-
யூட் செல்வகுமார் (மருமகன்)
54/2 சந்தானமாதா கோயில்,
முன் ஒழுங்கை,
பாண்டியந்தாழ்வு. (32117)

திருமதி
## றெஜினா சொர்ணம் நவரத்தினசிங்கம்

26 – 7 – 94 காலமான பண்டத்தரிப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற அதிபர் எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்களின் அன்புப் பாரியார் திருமதி றெஜினா சொர்ணம் நவரத்தினசிங்கம் அவர்களின் நல்லடக்கம் இன்று 28 - 7 - 94 வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பண்டத்தரிப்பில் நடைபெறும்.

28 - 7 – 94 காலை 9 மணிக்கு 109, புகையிரத நிலைய வீதி இல்லத்திலிருந்து அவரது பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு அடைக்கலமாதா கோவிலில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் பண்டத்தரிப்பு ஜசிந்தா கன்னியர் மடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி. ப. 2. 30 மணிக்கு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார்ஆலயத்தில் இரங்கற் திருப்பலியின் பின் பண்டத்தரிப்பு குடும்ப சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

தகவல்:-
மனுவலா சிங்கராயர் (மகன்)
(32121)

## திருமதி செல்லையா சரஸ்வதி

கச்சேரியடியை சேர்ந்த திருமதி செல்லையா சரஸ்வதி காலமானார்

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், சந்திரசேகரா. வேதநாயகம் (பத்திரிகை முகவர்), தபேஸ்வரி, சிகரெட்ணம் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகம்மா, சறோஜினிதேவி. கனகரெட்ணம், அன்னராசகுமாரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-7-94) வியாழன் காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
A.S. வேதநாயகம் (மகன்)
இல 11, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (32120)

## தில்லையம்பலம் மார்க்கண்டு

அளவெட்டி அணிஞ்சிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுழிபுரத்தில் வசித்து வந்தவருமான தில்லையம்பலம் மார்க்கண்டு 27-07-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் ஞானாம்பிகை திருநாவுக்கரசு (யாழ்ப்பாணம் தொழில் திணைக்களம்), நகுலம்பிகை, கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசலிங்கம், மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மேனகா இராஜ்பிரபு. தாரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று 27 – 07 - 94 இல் சுழிபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து பிற்பகல் 3 00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருவடிநிலை மயானத்தில் தகனக்கிரியை நடைபெற்றுள்ளது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்,
மா. திருநாவுக்கரசு (மகன்)
(32122)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28 - 07 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பிரேமா வீடு அருகேயும் இம்முறை நீல நிறக் கொடி!

கொழும்பு, ஜூலை 28

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின். சுசரித்த வாசஸ்தலத்தின் முன்னாலும் நீல நிறக் கொடிகளும் பறக்கவிட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸா உயிருடனிருந்த அப்பகுதி ஒரே பச்சை நிறக்கொடி மயமாகவே காணப்பட்டு வந்தது என்றும் –

இத்தேர்தலில் அங்கு பச்சைக் கொடிகளுக்கு அருகில் நீல நிறக் கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன என்றும்—

இது அரசியல் அலை வீசும் போக்கைக் காட்டுவதாகவும் அவர் கூறினார்.

## ஆலயங்களில்

வைரெமு ஸ்ரீவீரசக்தி விநாயகர் கோயிலில் இன்று முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீவீரசக்தி விநாயகருக்கு நவோத்ர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. விசேட நிகழ்ச்சியாக அருள் மொழி, இசையரசு கந்தர் மடம் பிரம்மஸ்ரீ சிவ. வை; நித்தியானந்த சர்மாவின் சிறப்புச் சொற்பொழிவும் அங்கு இடம் பெறும்.

★ ★ ★

கல்வியங்காடு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயில் மஹோற்சவம் நாளை வெள்ளி ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளது. சுவாமி தெரு வீதியுலா அடுத்த மாதம் 10ஆம் திகதி இடம் பெறும். (ஐ)

★ ★ ★

வண்ணை, சாத்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் நடைபெற்று வந்த திருமுறை முற்றுதல் பூர்த்தி விழா நாளை (வெள்ளி) முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

சாவகச்சேரி, துர்க்கை அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும்.

ஆகஸ்ட் ஆறாந் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-117)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி சந்தணமுதலிச்சிபுலம் ஸ்ரீமுருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். ஆகஸ்ட் ஆறாம் திகதி இரதோற்சவமும் ஏழாந்திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-117)

## இன்று

போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்பட ஓவியக் கண்காட்சி ஒன்று இன்று காலை 8.30 மணி தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (க-117)

★ ★ ★

வல்வெட்டித்துறை மாவடி, மாவீரர் விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வீதியில் கழகத் தலைவர் திரு. கி. மார்க்கண்டு தலைமையில் நடைபெறும். (க-155)

★ ★ ★

யாழ்ப்பாணம்' ஜூலை 28

கோப்பாய் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

### மட்டுநகரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளை படையினர் சுற்றிவளைத்து அடிக்கடி தேடுதல் நடத்துவதாகவும்— கூறப்படுகிறது:

கடந்த வாரம் அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் 7 தமிழர்களை கைது செய்து விசாரணைக்கு கொண்டு சென்றதாகவும்— தெரிவிக்கப்பட்டது, (உ-3)

உ
சாவகச்சேரி
## அருள்மிகு துர்காதேவி தேவஸ்தானம்

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 29 – 07 – 1994 வெள்ளி பகல் 12மணி |
| சித்திரத் தேர்: | 06 – 08 – 1994 சனி முற்பகல் 10 மணி |
| தீர்த்தத் திருவிழா: | 07 – 08 – 1994 ஞாயிறு காலை 9 மணி |
| பூங்காவனம்: | 08 – 08 – 1994 திங்கள் பிற்பகல் 3மணி |
| ஆடிப்பூர திருவிளக்கு பூஜை: | 09 – 08 – 1994 செவ்வாய் பிற்பகல் 3மணி |

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா,
ஆலய தர்மகர்த்தா.
[32029]

## அந்தியேட்டி அறிவிப்பு



தோற்றம்: 05 – 01 – 1913
மறைவு: 29 – 06 – 1994

## திருமதி பரமநாயகம் சோமசுந்தரம்

வல்வெட்டித்துறை காலஞ்சென்ற சிவதொண்டன் சதிரிப்பிள்ளை சோமசுந்தரம் (பயில்வான் சோமு) அவர்களின் மனைவி திருமதி பரமநாயகம் சோமசுந்தரம் 29-06-94 புதன்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் அந்தியேட்டி நாளை 29-07-94 அன்று காலை நடைபெற்று, வல்வெட்டித்துறை ஊறணி சமுத்திரத்தில் அஸ்தி சங்கமிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
க. சோ. சிவனருள்சுந்தரம்
சட்டத்தரணி, வல்வெட்டித்துறை; (32052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ராஜீவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் துரதிஷ்டவசமானவை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### பிரதமராக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை பிரதமரின் கூற்று மேற்கோளிட்டு காட்டுவதாக பி.பி.ஸி சிங்களச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

சிறிமா, சந்திரிகா இருவருமே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்; இருவரும் நிச்சயமாக எம்.பிக்களாகத் தெரிவு செய்யப்படுவர் என்பதும் தெரிந்ததே.

பிரதமர் பதவிக்கு சந்திரிகாவின் பெயரையே எதிரணிக் கூட்டணியில் உள்ள ஐந்து கட்சிகளும் முன்மொழிந்துள்ள போதிலும் —

அந்த முடிவை சிறிமாவோ ஏற்பது கடினம் என்றும் அவர் சந்திரிகாவுடன் மோதல் போக்கையே தொடங்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் —

செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது, (உ-எ-4)

### வல்வெட்டித்துறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரேவடிக் கடற்கரையோரமாக நடத்தப்பட்ட தாக்குதல்களினால் கரையில் கட்டுப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையான படகுகள், றோலர்கள் என்பன சேதமடைந்தன.

வல்வை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் கூரைகள் அருகில் இருந்த பாலர் பாடசாலை என்பவற்றின் கூரைகளும் சேதமடைந்தன.

ரேவடி ஐக்கிய விளையாட்டு மைதானத்தின் பல இடங்களில் பெரிய குழிகள் உண்டாகியுள்ளன. புக்காரா விமானம் பல தடவைகள் கலிபர் மற்றும் மோட்டோர் றொக்கெட் தாக்குதல்களையே நடத்தியது.

புக்காரா விமானம் நடத்திய றொக்கட் தாக்குதலினால் ஊறணியில் உள்ள குடியேற்றத்தில் மதில் சேதமடைந்ததாகவும் தெரிய வந்தது.

விமானமும், ஹெலியும் வல்வெட்டித்துறையில் தாக்குதல்களை நடத்திய பின்னர் தொண்டமானாறு, பருத்தித்துறைப் பகுதிகளையும் நோட்டமிட்டுச் சென்றன:

வல்வைப் பகுதியில் கடந்த வாரத்தில் புதன், வியாழக் கிழமைகளில் அடுத்தடுத்து விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. [அ-155-173-15]

### ஈழத்தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் என்பது குறிப்பிடத்தக்கது:

ஏற்கனவே பட்டணம்காத்தான் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தொடர்பு கொண்டவர் என்ற சந்தேகத்தில் "தடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சிவத்தம்பி என்ற ஈழத்தமிழரை விடுதலை செய்யும்படி கடந்த ஜூன் 8 ஆம் திகதி நீதிபதி உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் வேறு வழக்குகளுக்காக பொலீஸார் அவரை மீண்டும் கைது செய்தனர். (உ-க)

### பல எதிரணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார்.

இதேபோன்று —

தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்படி பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. எம். ஜயரத்னவும் ஜனாதிபதியை கடிதம் மூலம் கோரியிருக்கிறார்.

லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி பிரேமதாஸா ஆகியோர் மாகாண சபைத் தேர்தல் காலத்திலேயே கொலையுண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

### சர்வதேச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவை குறித்தும் ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு அவர் பலாலி மற்றும் படைமுகாம்களுக்கும் சென்று விவரங்களை சேகரிப்பார்.

யாழ். மாவட்ட நிலைவரம் குறித்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் அவர் பேச்சு நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜெனிவா திரும்பியதும் இங்குள்ள நிலைமை குறித்து அறிக்கை ஒன்றை தமது தலைமையகத்துக்கும், இலங்கை அரசுக்கும் அவர் சமர்ப்பிப்பார் என்றும் தெரிய வந்தது. (உ-3)

# மரண அறிவித்தல்கள்

திருமதி
## மயில்வாகனம் மங்கையற்கரசி அம்மாள்

பிரப்பங்குள ஒழுங்கையில் வசித்த திருமதி மயில்வாகனம் மங்கையற்கரசி அம்மாள் 27-7-94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற அருணாசலம் மயில்வாகனம் (E.O.A) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உருத்திரபசுபதி, நாகேந்திரம் (இலங்கை வங்கி முகாமையாளர், மானிப்பாய்), சிவானந்தம் (கணக்கு பரிசோதகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கேதாரகௌரி, பரிமளாதேவி, இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பாஸ்கரதேவன், விஜயலஷ்மி, இந்திராதேவி, சூரியகுமார், சிவகுமார், சாந்திகுமார், சுகந்தி, சசிகுமார், சுதமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-7-94) அவரது இல்லத்தில் பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. நாகேந்திரம் (மகன்)
143/4, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (32124)

## செல்வி பே. ஜெயமலர்

(ஆசிரியை)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ஜெயமலர் பொனிப்பாஸ் (ஆசிரியர், பரிதிசில் கல்லூரி நீர்கொழும்பு) 23-07-94 சனிக்கிழமை கற்பிட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொனிப்பாஸ் திருமதி பரமானந்தரம் (சரஸ்வதி) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், ஜெயராஜா (காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்), திருமதி ஜெயரத்தினம், நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாசறிப்போல் வீடமைப்பு உப வேலைப் பரிசோதகர் மன்னார்) திருமதி தேவபுஸ்பராணி ஆகியோரின் மைத்துனியும், டோக்ரன், பிரேமினி ஆகியோரின் சிறிய தாயாரும், வின்சென்ற் (கட்டட ஒப்பந்தகாரர்), யேசுதாயகம் (இளைப்பாறிய கணக்காளர்), திருஞானம் (ஆசிரியர்), யேசுதாசன் (ஆசிரியர்) ஆகியோரின் பெறாமகளும், சிவதாசன் (ஆசிரியர்) இன் மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26-07-94 திங்கட்கிழமை கற்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
புதுஅளவு,
சுன்னாகம். (32118)

## செல்வி மேனகா கெங்காதரன்

(யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 4 ஆம் ஆண்டு மாணவி)

செல்வி மேனகா கெங்காதரன் (யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 4 ஆம் ஆண்டு மாணவி) நேற்றுக் காலமானார்.

இவர் திரு. திருமதி கெங்காதரன் கனகம்மாவின் அன்பு மகளும், மயூரன், பகீரதன் (மாணவர் யா / சுந்தியகல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி - பசுபதி (முத்தையன்கட்டு), மகேஸ்வரி-கனகலிங்கம் (கனடா), சிறீதரன் (பிரான்ஸ்), மனோகரன், புலேந்திரன் (யாழ்ப்பாணம்), இராஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகளும், பரமகுலசிங்கம் லீலாவதி (இந்தியா) காலஞ்சென்ற கமலநாதன், மற்றும் ரேவதி, இராசையா – கமலாவதி (பருத்தித்துறை) பாலசுந்தரம் - இராசமலர் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28 – 7 – 94 காலை 11 மணியளவில் 50 / 4, சங்கிலியன் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
வி. கெங்காதரன் (தகப்பன்)
50 / 4, சங்கிலியன் வீதி,
நல்லூர். (32116)

## திருமதி இராசம்பாள் முருகேசு

திருமதி இராசம்பாள் முருகேசு காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பரமு முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், குணம் (யாழ் மாநகர சபை), சந்திரேஸ்வரன் (இத்தாலி), மனோகரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (பிரான்ஸ்), திருமதி மனோகரி கனகசபாசன் (ஆசிரியை யாழ் / கன்னியர் மடம்). திருமதி மனோரதி உருத்திரசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தேவதாசன், கனகலிங்கம், திருமதி குணவதி நடேசர், திருமதி பவானலட்சுமி தேவராசா, பஞ்சலிங்கம், இலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வி வைதேவி உருத்திரசிங்கம் (வண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி), செல்வி சர்மிலி உருத்திரசிங்கம் (யாழ் / கனகரத்தினம் மகா வித்தியாலய மாணவி), குருபரன் கணேசதாசன் (யாழ். பரியோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28 – 7 - 94 3 மணியளவில் அன்னாரின் 18, விபுலானந்தர் வீதி கொழும்புத்துறையிலுள்ள இல்லத்தில்நடைபெற்று, அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மு. குணம் (மகன்)
18, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை. (32119)